### கடந்த 2 மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை:

# Childline (1098) அமைப்பின் பணியாளர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு முன்வர வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூலை 18–**

**Childline (1098) அமைப்பில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கடந்த 2 மாதமாக சம்பளம் வழங்கப்படவில்லை. எனவே அவர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்க அரசு முன்வர வேண்டும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது சமூக வலைதளப்பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:

குழந்தைகள் நலனுக்கான #Childline (1098) அமைப்பின் பணியாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

ஊதியம் இல்லாத நிலையில் Childline பணியாளர்கள் சிலர் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க இரவு நேரங்களில் மாற்று வேலைகளுக்கு செல்லக்கூடிய அவலம் ஏற்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் இந்தப் பணியே வேண்டாம் என விலகும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்யும் Childline அமைப்பு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு அதில் பணிபுரிவோரின் நலனும் முக்கியம்.

எனவே Childline பணியாளர்களின் ஊதியப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து, அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### விசாரணை என்ற பெயரில்

# காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருக்கும் பத்திரிகையாளர் விஜயனை உடனே விடுதலை செய்க!

## த.வெ.க. அரசின் செயலுக்கு – கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, ஜூலை 18–

பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருக்கும் த.வெ.க. அரசின் காவல் துறையின் செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் உடனே அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கனிமொழி கருணாநிதி

இது குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:

பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விசாரணை என்னும் பெயரில் அராஜகமான முறையில், அவரது தொலைப்பேசியைப் பறிமுதல் செய்து காவல்நிலையத்தில் அடைத்து வைத்திருக்கும் தவெக அரசின் காவல்துறையின் செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஜனநாயக அடிப்படையில் விமர்சிக்கும் மாற்றுக் கட்சியினரைப் பழிவாங்கும் கீழ்மையான அரசியலை, தற்போது பத்திரிகையாளர்கள் மீதும் செய்யத் தொடங்கிவிட்டது தவெக அரசு.

உடனடியாக பத்திரிகையாளர் விஜயன் அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தனது ட்விட்டர் பதில் குறிப்பிட்டுள்ளார்.

---

# தேர்தல் வாக்குறுதி vs த.வெ.க.வின் பாசிஸ்ட் ஆட்சி!

## தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூலை.18–

த.வெ.க.வின் தேர்தல் வாக்குறுதி vs த.வெ.க.வின் பாசிஸ்ட் ஆட்சி என்று தி.மு.க. ஐ.டி. விங் ட்விட்டர் பதிவில் விமர்சித்துள்ளது.

இது குறித்து தி.மு.க. ஐ.டி. விங் பதிவு வருமாறு:-

உங்கள் தேர்தல் அறிக்கையின் 89வது பக்கத்தில்,

1. “ஒவ்வொரு காவல் படுகொலையும் அரசின் தோல்வி” என நீங்களே எழுதி வைத்துவிட்டு, இன்று உங்கள் ஆட்சியின் கீழ் ஒரே வாரத்தில் மூன்று காவல் மரணங்களை அனுமதித்திருப்பது உங்கள் தோல்வியின் உச்சமல்லவா?


இன்பம் 10 வெற்றித் தமிழ்நாடு

3 காவல் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி

ஒரு மாநிலத்தில் நடக்கும் ஒவ்வொரு காவல் படுகொலையும் அந்த மாநிலத்தை நிர்வகிக்கும் அரசின் தோல்வியைக் காட்டுகிறது. நமது த.வெ.க. ஆட்சியில் – திமுக ஆட்சியில் நடத்தப்பட்ட காவல் மரணங்களால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நீதியைப் பெற்றுத் தர – சுதந்திர விசாரணை மேற்கொள்ளப்படும். இத்தகைய கொடும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் அனைவர் மீதும் எந்தவித பாரபட்சமும் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

4 நீதித்துறை உட்கட்டமைப்பு மேம்பாடு & வழக்குகள் நிலுவை குறைப்பு

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், பொதுமக்களுக்கு நீதியை எளிதாக அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும், புதிய உள்ளூர் நீதிமன்றங்கள் நிறுவப்படும்.

5 சட்டவிரோத மதுபான விற்பனைக்கு பூஜ்ய சகிப்புத்தன்மை

போலி, சட்டவிரோத மற்றும் கருப்புச் சந்தை மதுபானங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை முழுமையாக ஒழிக்க த.வெ.க. அரசு உறுதிபூண்டுள்ளது. இதனை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி, சம்பந்தப்பட்ட விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் துணைபுரிபவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2. அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு ‘Party Fund’ பெயரில் 30 லட்சம் வரை உங்கள் கட்சியினரே லஞ்சம் வசூலிப்பதுதான் உங்கள் நீதித்துறை மேம்பாடா?

3. நிஜத்தில் பாட்டிலுக்கு 30 ரூபாய் கமிஷன், FL2 பார் உரிமத்திற்கு லட்சக்கணக்கில் Party Fund எனக் கூறி லஞ்சம் என உங்கள் அரசு ஊழலில் ஊறித் திளைக்கிறது!

ஆட்சி நிர்வாகத்தில் ABCD கூடத் தெரியாத ‘பொம்மை’ முதல்வராகவும், கட்சியினரை கட்டுக்குள் வைக்கத் தெரியாத ‘டம்மி’யாகவும் நீங்கள் இருப்பதால், மாநிலமே முடங்கி நிற்கிறது – என்று தி.மு.க. ஐ.டி.விங் ட்விட்டரில் பதிந்துள்ளது.

---

### கழக ஆட்சியில் – காரைக்குடி புலவர் ஆ.பழநியின் நூல்களை நாட்டுடைமையாக்கிய

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

## முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன் – மு.தென்னவன் – முன்னணியினர் பங்கேற்பு!

காரைக்குடி, ஜூலை 18-

கடந்த ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், ஏப்.29 இல் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை யொட்டி, தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் “தமிழ் வளர்ச்சி நாள்” விழா தமிழகம் முழுவதும் ஒருவாரம் நடந்தது.

இந்த விழாவில் இறுதி நாளான 2025 மே -05ம் நாள் சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்ட நிகழ்வில் “திராவிட மாடல்” முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று, காரைக்குடி “பகுத்தறிவுப் பாவலர்” ஆ.பழநி எழுதிய படைப்பிலக்கிய 18நூல்களையும் நாட்டுடைமை செய்து அரசாணையும், பரிவுத் தொகை காசோலையும் வழங்கினார்கள். இதனை புலவரின் மரபுரிமை வாரிசுகளான சுப.அழகுப் பாண்டியனும் அவரது பேரன்களும் பெற்றுக் கொண்டனர். அத்தொகையினை வங்கியில் முதலீடு செய்து “புலவர் ஆ.பழனி அறக்கட்டளை”யும் தொடங்கி பதிவு செய்தனர்.

**நன்றி - பாராட்டு விழா!**

புலவரின் நூல்களை நாட்டுடைமையாக்கிய “திராவிட மாடல்” முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், அதற்கு உறுதுணையாக இருந்த திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிக்கும் விழா, நாளை (சூலை 18 சனிக்கிழமை) மாலை காரைக்குடியில் செக்காலை பேக்கரி - போலீஸ் காலனி அருகில் உள்ள கிருஷ்ணா கார்டன் அரங்கில் நடக்கின்றது.

அறக்கட்டளையின் தலைவர் சுப.அழகுபாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

துணை மேயர் நா.குணசேகரன், தொழிலதிபர்கள் சா.நடராஜன், கா.நாராயணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சாமி திராவிட மணி நோக்கவுரையாற்றுகிறார்.

வா.கிருட்டின பிரசாத் நன்றியுரையாற்றுகிறார்.

தி.என்னாரெசு பிராட்லா இணைப்புரை வழங்குகிறார்.

இதில் மாவட்ட தி.மு.க. செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தி.மு.க. இலக்கிய அணி நிர்வாகி கவிச்சுடர் கவிதைப்பித்தன், தி.க.து. பொதுச் செயலர் பிரின்சு என்னாரெசு பெரியார், முனைவர் மா.சுப.சரளா உட்பட பலரும் கலந்து கொள்கிறார்கள்.

---

### விஜய் ஆட்சியில் காவல்துறை அராஜகம்!

# லாக்அப் மரணங்கள் தொடர்கின்றன!

## புழல் சிறையில் கைதி மரணம்!

சென்னை, ஜூலை 18-

புழல் சிறையில் பாலாஜி மரணமடைந்ததற்கு காவல்துறையினரே காரணம் என குற்றஞ்சாட்டி, அவரது உறவினர்கள் ஊர் மக்கள், சேலையூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னையை அடுத்த சேலையூர் பகுதியை சேர்ந்த பாலாஜி என்ற கைதி புழல் சிறையில் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். கடந்த 3 தினங்களுக்கு நாகர்கோவிலில் சபரிவர்மன் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட நிலையில், புழல் சிறையில் பாலாஜி உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பெட்டி கடையில் குட்கா விற்பனை செய்ததாக பாலாஜியை சேலையூர் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். அதன்பிறகு புழல் சிறையில் அடைக்கப்பட்ட அவர் திடீரென உயிரிழந்து விட்டதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இதனால், நேற்றே ஸ்டான்லி மருத்துவமனையில் அவரது உடலை வாங்க மறுத்து உறவினர்கள் போராட்டம் நடத்தினர்.

பாலாஜியின் மரணத்திற்கு காவல்துறைதான் காரணம் என குற்றஞ்சாட்டி வரும் உறவினர்கள், ஊர் மக்கள் சேலையூர் சேலையூர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். 150க்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

த.வெ.க. ஆட்சியில் ஒரு புறம் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், மறுபுறம் லாக்அப் மரணங்கள் தலைத்தூக்கி வருவது மக்கள் மத்தியில் அதிருப்தியை மேலும் அதிகமாக்கியுள்ளது.

---

### ஆசிரியர் கலந்தாய்வு நிறுத்தப்பட்டுள்ள நிலையில்

# அமைச்சர் நிர்மல் குமாரின் மனைவிக்கு சிறப்புச் சலுகையா?

## ஆசிரியர் சங்கங்கள் கண்டனம்!

சென்னை, ஜூலை 18–

பணிமாறுதல் இல்லாத நேரத்தில், அமைச்சர் நிர்மல்குமாரின் மனைவிக்கு பணி மாறுதல் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை மாதங்களில் ஆசிரியர் பணியிட பொது மாறுதல் கலந்தாய்வு ஆன்லைன் வழியாக நடைபெறும். ஆன்லைன் மூலம் விண்ணப்பப்பதிவு, கலந்தாய்வு வெளிப் படையாக நடப்பதாக கடந்த ஆட்சியில் எதிர்கட்சிகளே பாராட்டு தெரிவித்த நிகழ்வும் நடைபெற்றது. நடப்பு கல்வியாண்டுக்கான பணியிட மாறுதல் கலந்தாய்வுக்கு பள்ளிக்கல்வித்துறையின் எமிஸ் இணையதளம் வழியாக ஜூன் 15 முதல் 22ம் தேதி வரை ஆசிரியர்கள் விண்ணப்பித்தனர்.

அதனை தொடர்ந்து, பணியிட மாறுதல் கலந்தாய்வு ஜூலை 1ம் தேதி தொடங்கியது. இடைநிலை ஆசிரியர்களுக்கான மாவட்டம் விட்டு மாவட்டம் பணி மாறுதலுக்கான கலந்தாய்வும், மாவட்டத்துக்குள்ளேயே பணியிட மாறுதல் கலந்தாய்வும் நடந்தது. தொடர்ந்து ஜூலை 6ம் தேதி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு நடைபெறவிருந்த நிலையில், நீதிமன்ற உத்தரவின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழ்நாடு அரசில் மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சராக இருக்கும் நிர்மல் குமாரின் மனைவிக்கு கலந்தாய்வே நடைபெறாமல் பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரின் மனைவி பல்லாவரம் மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்.

அவருக்கு தற்போது சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள லேடி வெலிங்டன் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பணியிட மாறுதல் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சருக்கு பசுமை வழிச்சாலையில் உள்ள பங்களா ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அவரது மனைவிக்கு பணியிட மாற்றம் வழங்கியிருப்பது பள்ளிக்கல்வித்துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பணியிட மாறுதல் கவுன்சலிங் நடைபெறும் போது பல இடங்களை வெளிப்படையாக காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டை கடந்த பல ஆண்டுகளாக தெரிவித்து வருவதாக கூறும் ஆசிரியர்கள், இவ்வாறு மறைக்கப்படும் இடங்களில் இதுபோன்ற செல்வாக்கு உள்ளவர்களுக்கும், பணத்திற்காக விற்பதாகவும் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர்.

ஆனால் அமைச்சர் என்ற காரணத்துக்காக அவரது மனைவிக்கு அயல்பணி வழங்கப்பட்டுள்ளதாகவும், அதுவும் பணி மாறுதல் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அவருக்கு வழங்கப்பட்ட பணியிடத்தை காலியிடமாக காட்டாமல் மறைத்து வைத்து அயல்பணி வழங்கப்பட்டுள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

---




சென்னை கிழக்கு மாவட்டம் , துறைமுகம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள தயாளு அம்மாள் அழகுக் கலை பயிற்சி பள்ளியில் பயிற்சி முடித்த 68 மாணவிகளுக்கு துறைமுகம் சட்டமன்றத் தொகுதி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான பி.கே.சேகர்பாபு சீருடைகள் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் துறைமுகம் பகுதி செயலாளர்கள் எஸ்.ராஜசேகர்,எஸ்.முரளி, எல்.சத்யநாராயணன் ,எம். பரத்குமார் ,டி.சதீஷ்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், புளியங்குளம் ஊராட்சி, அரசன்குளம் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.53 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூட கட்டிடத்தினை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி திறந்து வைத்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் பெ.கீதாஜீவனுடன் இணைந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் கலந்து கொண்டனர். மேலும் நிகழ்வில் தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், காசிவிஸ்வநாதன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, ஒன்றிய பொருளாளர் முனியசாமி, மாவட்ட பிரதிநிதிகள் ஜெயராமன், செந்தூர்பாண்டி, புதுராஜா, எப்போதும்வென்றான் சோலைசாமி, திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் முத்துக்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.